IN THE COURT OF IIIADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

S.C.No.8/19

Deposition of witness for

PW3 (LW3 )

Name : Selvi. Preetha

S/W Name : D/o Dhilip
Age :
Address : 57 E, Kakanji Nagar, I.C.F , Chennai – 38.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 4th day of January 2024.

---

**04.01.2024**.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

கு.ப.ம. எண் 32672/2023 நாள் 4.1.2024 தேதியிட்ட உத்தரவுப்படி சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை

என் தந்தைக்கு ஜனவரி 1ம் தேதி 2018 ம் வருடம் ஹவுஸ் கீப்பிங் வேலை என்பதால் வேலைக்கு போனார். சம்பவ இடத்திற்கு அருகே நான்கு சாலைகள் சந்திக்கும் இடம் என்பதால் கூட்டமாக இருக்கும் என்றால் காலை நேரம் என்பதால் கூட்டமாக இல்லை. சம்பவ இடம் அருகே ஐ.சி. எப் மருத்துவமனை இருக்கிறது என்றால் சரிதான். எனது அண்ணனின் நண்பர்கள் லோகேஷ் மற்றும் குணா ஆகியோர் சம்பவம் பற்றி நேரில் வந்து என்னிடம் சொன்னார்கள். என் அண்ணனுக்கு பல நண்பர்கள் இருக்கிறார்களா என்றால் அது எனக்கு தெரியாது. என் அண்ணன் பல சமூக விரோதிகளுடன் நட்பு வைத்திருந்தார் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் நான் எனது அண்ணனை சம்பவத்திற்கு பிறகு சம்பவ இடத்தில் பார்த்த போது அவர் உயிரோடு இல்லை. என் தந்தை மற்றும் தாயார் ஆகியோரின் வருமானத்தில் நாங்கள் வசதியான

வீட்டில் வாழ்ந்திருக்கலாம் என்றால் என் தாயார் என் வீட்டு வேலை செய்து வருகிறார். என் தந்தை ஹவுஸ் கீப்பிங் வேலை செய்து வருகிறார் அதனால் எங்களுக்கு போதிய வசதி இல்லை. என் அண்ணனுக்கும் எதிரிக்கும் சம்பவத்தன்று எந்த பிரச்சினையும் இல்லை. எனது அண்ணனை மது அருந்த கூடாது என்று என் தந்தை பல முறை எச்சரித்துள்ளார் என்றால் சரியல்ல. எனது அண்ணனுக்கு சீட்டு விளையாடும் பழக்கம் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகே ஒரு போலீஸ் பூத் உள்ளது. புகார் கொடுத்தபிறகு தான் போலீஸார் என்னை விசாரித்தார்கள் அதற்கு முன்பாக என்னை விசாரிக்கவில்லை. எனது அண்ணனுக்கு வேறு விரோதிகள் இருக்கிறார்கள் என்றாலும் அவர்கள் தான் என் அண்ணனை கொலை செய்தார்கள் என்றால் சரியல்ல. நான் சொல்லிக்கொடுத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை:</u> இல்லை.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

III Addl. Sessions Judge,
III Addl. Court.